# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 104/மா/2024**

**நாள்: 06.11.2025**

திரு. B. இரமேஷ் --- முறையீட்டு மனுதாரர்
சென்னை

ஆணையர், --- எதிர்மனுதாரர்
பெருநகர சென்னை மாநகராட்சி

சென்னை, உயர்நீதிமன்ற வளாகம், புதிய கூடுதல் சட்ட அறை, எண் 222 என்கிற முகவரியில் அலுவலகம் வைத்திருக்கும் திரு. B. ரமேஷ் என்பவரின் 11.07.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.07.2024 அன்று பெறப்பட்டு 104/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

சென்னை, உயர்நீதிமன்ற வளாகம், புதிய கூடுதல் சட்ட அறை, எண் 222 என்கிற முகவரியில் அலுவலகம் வைத்திருக்கும் திரு. B. ரமேஷ் என்பவர் தனது மனுவில் பின்வரும் புகாரினை தெரிவித்துள்ளார்:-

> "சென்னையில் வசிக்கும் ஒரு நபர் அவருடைய வீட்டில் இயல்பான முறையில் நோய்களின்றி மற்றும் மருத்துவரின் மருந்து கவனிப்பு இல்லாமல் இறந்து விட்டால், இறந்த நபரின் உறவினர் இறந்தவருக்கு அவருடைய மரணத்திற்கு முன்பு ஏற்பட்ட அறிகுறிகள் மற்றும் இறப்பிற்குரிய காரணம் ஆகிய விவரங்களை விரிவான அறிக்கையாக பிறப்பு இறப்பு பதிவுச் சட்டப்படி பெருநகர சென்னை மாநகராட்சியின் பிறப்பு இறப்பு பதிவாளரிடம் படிவம் 2ல் இறப்பு சான்று பெறுவதற்காக அளிக்க வேண்டும். அதேபோன்று சென்னையில் வசிக்கும் ஒரு நபரின் இறப்பானது வீட்டில் நிகழ்ந்து மற்றும் இறுதி மருத்துவ கவனிப்பு மருத்துவ அலுவலரால் மேற்கொள்ளப்பட்டிருப்பின் இறந்த நபரின் உறவினர்கள் படிவம் 4Aல் மருத்துவ சான்று பெற்று பிறப்பு இறப்பு பதிவாளருக்கு இறப்பினை பதிவு செய்ய வழங்க வேண்டும். இது சம்பந்தமாக தமிழக பொது சுகாதார இயக்குநர் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகராட்சிகளுக்கும் தெளிவான வழிகாட்டுதல் வழங்கி

கடந்த 26.01.2020 தேதியில் (R.No.126275/SBHI/JA/99) கடிதம் எழுதியுள்ளார். இது எனக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டம் வாயிலாக அண்மையில் கிடைக்கப் பெற்றது. மேலும் தமிழக பொது சுகாதாரத்துறை இயக்குநர் கடந்த 29.12.2023 தேதியில் எனக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டம் வாயிலாக தகவல் அளித்துள்ளார். பிறப்பு மற்றும் இறப்பு விவரங்களை பதிவு செய்ய பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம் தோறும் அலுவலர்கள் உள்ளனர்.

ஆனால் நோய்கள் இன்றி மற்றும் மருத்துவரின் மருந்து கவனிப்பு இல்லாமல் வீட்டிலேயே இயல்பான முறையில் இறந்து விடும் நபர்களின் உடலை பெருநகர சென்னை மாநகராட்சியின் மயான பூமியில் (burial ground) தகனம் செய்ய மயான பொறுப்பாளர்கள் மருத்துவச் சான்று கேட்டு வற்புறுத்துகிறார்கள். மருத்துவச் சான்று இல்லாமல் வீட்டிலேயே இறந்துவிடும் நபர்களின் உடலை தகனம் செய்ய மயான பொறுப்பாளர்கள் மறுக்கிறார்கள். இதனால் சாதாரண பொது மக்கள் வீட்டிலேயே இறந்துவிடும் தங்களது குடும்ப உறுப்பினரின் உடலை மயான பூமியில் தகனம் செய்ய இயலாமல் தவிக்கிறார்கள். வீட்டிலேயே இயல்பான முறையில் இறந்துவிடும் நபரை பரிசோதனை செய்து மருத்துவ சான்று அளிக்க பெரும்பாலும் மருத்துவர்கள் மறுத்து விடுகிறார்கள் அல்லது மருத்துவச் சான்றளிக்க பணம் அதிகமாக எதிர்பார்க்கிறார்கள். இது சட்டத்திற்கு புறம்பானது மட்டுமல்லாது லஞ்ச லாவண்யத்திற்கு வழி வகுக்கிறது.

எனவே, தாங்கள் தயவு செய்து மேற்படி நிகழ்வுகளை கருத்தில் கொண்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள மயான பூமியின் பொறுப்பாளர்கள் மற்றும் மண்டல அலுவலர்களுக்கு வீட்டிலேயே இயல்பான முறையில் நோய்களின்றி மற்றும் மருத்துவரின் மருத்துவ கவனிப்பு இன்றி இறந்து விடும் நபர்களின் உடலை மருத்துவரின் சான்று இல்லாமல் தகனம் செய்ய தக்க அறிவுரைகள் வழங்கி நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு கடந்த 07.03.2024 தேதியில் விண்ணப்பம் ஒன்றை நான் விரைவு அஞ்சல் மூலம் மேற்படி தமிழக பொது சுகாதாரத் துறை இயக்குநரின் கடித நகலை இணைத்து அனுப்பியிருந்தேன். மேலும், வீட்டிலேயே இயல்பான முறையில் நோய்கள் இன்றி மற்றும் மருத்துவரின் மருந்து கவனிப்பு இல்லாமல் இறந்து விடும் நபரைப் பற்றிய மரணவிவரங்களை அவரது உறவினர் படிவம் 2ல் பெறுவதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட மண்டல அலுவலர்கள் / மயான பொறுப்பாளர்கள் பெற தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு மேற்படி விண்ணப்பத்தின் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரை நான் கேட்டுக்கொண்டிருந்தேன். ஆனால் மேற்படி என் விண்ணப்பத்தின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனக்கும் எந்தவித தகவலும் தெரிவிக்கவில்லை. இதனால் பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட்ட பகுதிகளின் வீடுகளிலேயே இயல்பான முறையில் மருத்துவ சிகிச்சையின்றி இறந்துவிடும் நபர்களை சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டிலுள்ள மயான பூமிகளில் மருத்துவரின் இறப்பு சான்று இன்றி புதைப்பது மற்றும் எரிப்பது ஆகிய செயல்களை செய்வது மிகவும் கடினமாக உள்ளது. இதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, பொது நலன் கருதி மேற்படி நிகழ்வுகள் தொடர்பாக நான் கோரிய வண்ணம் தகுந்த உத்திரவுகள் பிறப்பிக்க மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி உத்திரவு பிறப்பிக்குமாறு தங்களை நான் பணிவன்புடன் வேண்டுகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 16.08.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி சுகாதார அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் தனது 22.04.2025 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

“பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1 முதல் 15 வரையுள்ள 200 கோட்டங்களில் நிகழும் பிறப்பு மற்றும் இறப்புகள், பிறப்பு மற்றும் இறப்பு புதிவு சட்டம் 1969 மற்றும் தமிழ்நாடு பிறப்பு மற்றும் இறப்பு விதிகள் 2000ன்படி பதிவு செய்யப்படுகின்றன.

(1) மனுதாரர் திரு. ரமேஷ் அவர்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் கோரிய தகவல்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்து துறை உரிய விளக்க கடிதங்கள் அளித்துள்ளது.

(2) பிறப்பு மற்றும் இறப்பு பதிவு சட்டம் 1969ல் பிரிவு 10 மற்றும் உட்பிரிவு 3ன்படியும் மற்றும் தமிழ்நாடு பிறப்பு மற்றும் இறப்பு பதிவு விதிகள் 2000ல் விதி 7ன்படியும் இறப்பிற்கான காரணங்களை நிர்ணயிக்கப்பட்ட படிவங்களான படிவம் 4 மற்றும் படிவம் 4A இல் அளிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி படிவத்தின் விவரங்களை தமிழ்நாடு தலைமை பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளருக்கு அளிக்குமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோன்று மேற்படி படிவங்களை பொதுமக்கள் மயான பூமிகளில் அளிக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி பெருநகர சென்னை மாநகராட்சி 1 முதல் 15 வரையிலான மண்டலங்களில் உள்ள 200 கோட்டங்களில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மயான பூமிகளில் மருத்துவ கவனிப்பு அல்லது மருத்துவ கவனிப்பு இல்லாது இறந்த நபரின் உடலை எரிப்பதற்கு / புதைப்பதற்கு தேவையான மருத்துவரின் மருத்துவ சான்றினை படிவம் 4 மற்றும் படிவம் 4A / காவல் துறை அறிக்கையினை பெற்ற பின்னரே இறந்த நபரின் உடலை எரிக்கும் / புதைக்கும் பணி மேற்கொள்ள அறிவுறுத்தி 1 முதல் 15 வரையிலான மண்டலங்களுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

(3) பிறப்பு மற்றும் இறப்பு பதிவு சட்டம் 10 (3)இல் இறப்பிற்கான காரணத்தினை படிவம் 4A இல் சம்பந்தப்பட்ட மருத்துவ அலுவலர்கள் எவ்வித கட்டணமும் பெறாமல் அளிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோன்று இறப்பிற்கான காரணத்தினை அளிக்க மறுக்கும் மருத்துவ அலுவலர்கள் மீது பிறப்பு மற்றும் இறப்பு பதிவு சட்டம் 23 (3) இன்படி நடவடிக்கை மேற்கொள்ளவும் வழிவகை உள்ளது.

(4) மேலும் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து துறை / தமிழ்நாடு தலைமை பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் அவர்களின் 24.10.2000 மற்றும் 01.12.2000 நாளிட்ட கடிதங்கள் வாயிலாகவும் மேற்குறிப்பிட்ட சட்ட பிரிவுகளை குறிப்பிட்டு இறப்பிற்கான காரணத்தினை படிவங்களில் பெறுமாறு அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் தமிழ்நாடு தலைமை பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.” என தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 21.05.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 13.05.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன,

5. மனுதாரர் 21.05.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"சென்னையில் வசிக்கும் ஒரு நபர் அவருடைய வீட்டில் இயல்பான முறையில் நோய்களின்றி மற்றும் மருத்துவரின் மருந்து கவனிப்பு இல்லாமல் இறந்த நபரின் உறவினர் இறந்தவருக்கு அவருடைய மரணத்திற்கு முன்பு ஏற்பட்ட அறிகுறிகள் மற்றும் இறப்பிற்குரிய காரணம் ஆகிய விவரங்களை விரிவான அறிக்கையாக பிறப்பு இறப்பு பதிவாளரிடம் படிவம் 2ல் இறப்பு சான்று பெறுவதற்காக அளிக்க வேண்டும். அதே போன்று சென்னையில் வசிக்கும் ஒரு நபரின் இறப்பானது வீட்டில் நிகழ்ந்து மற்றும் இறுதி மருத்துவ கவனிப்பு மருத்துவ அலுவலரால் மேற்கொள்ளப்பட்டிருப்பின் இறந்த நபரின் உறவினர்கள் படிவம் 4Aல் மருத்துவ சான்று பெற்று பிறப்பு இறப்பு பதிவாளருக்கு இறப்பினை பதிவு செய்ய வழங்க வேண்டும். பிறப்பு மற்றும் இறப்பு விவரங்களை பதிவு செய்ய பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம் தோறும் அலுவலர்கள் உள்ளனர்.

ஆனால் நோய்கள் இன்றி மற்றும் மருத்துவரின் மருந்து கவனிப்பு இல்லாமல் வீட்டிலேயே இயல்பான முறையில் இறந்து விடும் நபர்களின் உடலை பெருநகர சென்னை மாநகராட்சியின் மயான பூமியில் (Burial Ground) தகனம் செய்ய மயான பொறுப்பாளர்கள் மருத்துவச் சான்று கேட்டு வற்புறுத்தியும் தகனம் செய்யவும் மறுத்துவிடுகிறார்கள். மருத்துவச் சான்று இல்லாமல் வீட்டிலேயே இறந்துவிடும் நபர்களின் உடலை தகனம் செய்ய மயான பொறுப்பாளர்கள் மறுக்கிறார்கள். ஆனால் இவ்வாறு மருத்துவ சான்றிதழ் கேட்பதற்கு பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவு சட்டம் 1969ல் குறிப்பிடப்படவில்லை. மேலும், பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவு சட்டம் 1969 பிரிவு 8Aல் மேலே குறிப்பிட்டுள்ளவாறு நிகழ்வு நடைபெறும் பட்சத்தில் இறந்தவர்களின் வீட்டில் உள்ள வயது முதிர்ந்தோர் இறந்தவரின் இறப்பு தன்மை குறித்து எழுத்து பூர்வமாகவோ அல்லது வாய் மொழியாகவே உறுதி அளிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை பெருநகர சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள மயான பொறுப்பாளர்கள் ஏற்பதில்லை. இதனால் சாதாரண பொது மக்கள் வீட்டிலேயே இறந்துவிடும் தங்களது குடும்ப உறுப்பினரின் உடலை மயான பூமியில் தகனம் செய்ய இயலாமல் தவிக்கிறார்கள். மேலும், இந்நடைமுறை பெருநகர சென்னை மாநகராட்சியில் மட்டுமே உள்ளது. பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவு சட்டம் 1969ல் குறிப்பிடாத வீட்டிலேயே மருத்துவ சிகிச்சை இன்றி சாதாரணமாக இறந்து விடும் நபரை தகனம் செய்ய மருத்துவ சான்றிதழ் சமர்ப்பிக்க கோரும் மேற்கண்ட நடைமுறை சட்டப்பூர்வமானது அல்ல என்பதால் அதனை ரத்து செய்ய பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அறிவுறுத்துமாறு இம்முறை நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

6. சென்னை பெருநகர மாநகராட்சி மண்டல சுகாதார அலுவலர் மற்றும் துப்புரவு அலுவலர் ஆகியோர் 21.05.2024 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:

"உலக சுகாதார மையம் வரையறுத்துள்ள வழி காட்டுதலின்படியும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு சட்டம் 1969ல் பிரிவு 10 மற்றும் உட்பிரிவு 3ன்படியும் மற்றும் தமிழ்நாடு பிறப்பு மற்றும் இறப்பு பதிவு விதிகள் 2000ல் விதி 7ன்படியும் இறப்பிற்கான காரணங்களை நிர்ணயிக்கப்பட்ட படிவங்களான படிவம் 4 மற்றும் படிவம் 4Aஇல் அளிக்க வேண்டும் என

குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி படிவத்தின் விவரங்களை தமிழ்நாடு பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளருக்கு அளிக்குமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே போன்று மேற்படி படிவங்களை பொதுமக்கள் மயான பூமியில் அளிக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி பெருநகர சென்னை மாநகராட்சி 1 முதல் 15 வரையிலான மண்டலங்களில் உள்ள 200 கோட்டங்களில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மயான பூமிகளில் மருத்துவ கவனிப்பு அல்லது மருத்துவ கவனிப்பு இல்லாத இறந்த நபரின் உடலை எரிப்பதற்கு / புதைப்பதற்கு தேவையான மருத்துவரின் மருத்துவ சான்றினை (படிவம் 4 மற்றும் படிவம் 4A) / காவல் துறை அறிக்கையினை பெற்ற பின்னரே இறந்த நபரின் உடலை எரிப்பதற்கும் / புதைக்கும் பணி மேற்கொள்ள அறிவுறுத்தி 1 முதல் 15 வரையிலான மண்டலங்களுக்கு 22.04.2025 நாளிட்ட சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது (நகல் இணைக்கப்பட்டுள்ளது). இதன்படி 98 விழுக்காடு இறப்புகளின் காரணங்கள் தெளிவாக அறியப்பட்டு தமிழ்நாடு மற்றும் இந்திய அரசினால் சுகாதாரம் சார்ந்த மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. எனவே, இறப்பிற்கான காரணங்களை அறியும் தரவுகளுக்காகவும் இயற்கைக்கு மாறான முறையில் நிகழும் மரணங்களின் தொடர்பாக மேல் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டும் உலக சுகாதார நிறுவனத்தின் அறிவுறுத்தலின் பொருட்டும் மேற்கண்ட நடைமுறை பின்பற்ற பெருநகர சென்னை மாநகராட்சி ஆவன செய்துள்ளது.

மேலும், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு சட்டம் 10 (3)இல் இறப்பிற்கான காரணத்தினை படிவம் 4 Aஇல் சம்பந்தப்பட்ட மருத்துவ அலுவலர்கள் எவ்வித கட்டணமும் பெறாமல் அளிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோன்று இறப்பிற்கான காரணத்தினை அளிக்க மறுக்கும் மருத்துவ அலுவலர்கள் மீது பிறப்பு மற்றும் இறப்பு பதிவு சட்டம் 23 (3)இன்படி நடவடிக்கை மேற்கொள்ளவும் வழிவகை உள்ளது என்பதை இம்முறை மன்ற நடுவத்திற்கு தெரிவித்துக் கொள்கிறோம்.'' எனத் தெரிவித்துள்ளனர்.

7. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் மண்டல சுகாதார அலுவலர் மற்றும் துப்புரவு அலுவலர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர், சென்னையில் வசிக்கும் ஒரு நபர் அவருடைய வீட்டில் இயல்பான முறையில் நோய்களின்றி மற்றும் மருத்துவரின் மருத்துவ கவனிப்பு இல்லாமல் இறந்து விட்டால், இறந்த நபரின் உறவினர் இறந்தவருக்கு அவருடைய மரணத்திற்கு முன்பு ஏற்பட்ட அறிகுறிகள் மற்றும் இறப்பிற்குரிய காரணம் ஆகிய விவரங்களை விரிவான அறிக்கையாக பிறப்பு இறப்பு பதிவுச் சட்டப்படி பெருநகர சென்னை மாநகராட்சியின் பிறப்பு இறப்பு பதிவாளரிடம் படிவம் 2ல் இறப்பு சான்று பெறுவதற்காக அளிக்க வேண்டும் எனவும், அதேபோன்று சென்னையில் வசிக்கும் ஒரு நபரின் இறப்பானது வீட்டில் நிகழ்ந்து மற்றும் இறுதி மருத்துவ கவனிப்பு மருத்துவ அலுவலரால் மேற்கொள்ளப்பட்டிருப்பின் இறந்த நபரின் உறவினர்கள் படிவம் 4Aல் மருத்துவ சான்று பெற்று பிறப்பு இறப்பு பதிவாளருக்கு இறப்பினை பதிவு செய்ய வழங்க வேண்டும் என்பதும், பிறப்பு மற்றும் இறப்பு விவரங்களை பதிவு செய்ய பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம் தோறும் அலுவலர்கள் உள்ளனர் எனவும், ஆனால் நோய்கள் இன்றி மற்றும் மருத்துவரின் மருத்துவ கவனிப்பு இல்லாமல் வீட்டிலேயே இயல்பான முறையில் இறந்து விடும் நபர்களின் உடலை மருத்துவ சான்றிதழ் கோரி பெருநகர சென்னை மாநகராட்சியின் மயான பூமியில் (burial ground) தகனம் செய்ய மயான பொறுப்பாளர்கள் மறுக்கிறார்கள் என்பதும், இவ்வாறு மருத்துவ

சான்றிதழ் கோருவதற்கு பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவுச் சட்டம், 1969–ல் குறிப்பிடவில்லையெனவும், இதனால் சாதாரண பொது மக்கள் வீட்டிலேயே இறந்துவிடும் தங்களது குடும்ப உறுப்பினரின் உடலை மயான பூமியில் தகனம் செய்ய இயலாமல் தவிக்கிறார்கள் என்பதும், வீட்டிலேயே இயல்பான முறையில் இறந்துவிடும் நபரை பரிசோதனை செய்து மருத்துவ சான்று அளிக்க பெரும்பாலும் மருத்துவர்கள் மறுத்து விடுகிறார்கள் எனவும், மேற்படி நிகழ்வுகளை கருத்தில் கொண்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள மயான பூமியின் பொறுப்பாளர்கள் மற்றும் மண்டல அலுவலர்களுக்கு வீட்டிலேயே இயல்பான முறையில் நோய்களின்றி மற்றும் மருத்துவரின் மருத்துவ கவனிப்பு இன்றி இறந்து விடும் நபர்களின் உடலை மருத்துவரின் சான்று இல்லாமல் தகனம் செய்ய தகுந்த உத்திரவுகளை பிறப்பிக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடக் கோரி இருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

உலக சுகாதார மையம் வரையறுத்துள்ள வழி காட்டுதலின்படியும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு சட்டம் 1969ன் பிரிவு 10 மற்றும் உட்பிரிவு (3)ன்படியும் மற்றும் தமிழ்நாடு பிறப்பு மற்றும் இறப்பு பதிவு விதிகள் 2000ன் விதி 7ன்படியும் இறப்பிற்கான விவரங்களை நிர்ணயிக்கப்பட்ட படிவங்களான படிவம் 4 மற்றும் படிவம் 4Aஇல் தமிழ்நாடு பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளருக்கு அளிக்குமாறும் மற்றும் மேற்படி படிவங்களை பொதுமக்கள் மயான பூமிகளில் அளிக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், இதன் காரணமாக 98 விழுக்காடு இறப்புகளின் காரணங்கள் தெளிவாக அறியப்பட்டு தமிழ்நாடு மற்றும் இந்திய அரசினால் சுகாதாரம் சார்ந்த மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன எனவும், எனவே, இறப்பிற்கான காரணங்களை அறியும் தரவுகளுக்காகவும் இயற்கைக்கு மாறான முறையில் நிகழும் மரணங்களின் தொடர்பாக மேல் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டும் உலக சுகாதார நிறுவனத்தின் அறிவுறுத்தலின் பொருட்டும் மேற்கண்ட நடைமுறை பின்பற்ற பெருநகர சென்னை மாநகராட்சி ஆவன செய்துள்ளது என்பதும், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் சுகாதார அலுவலர் மற்றும் துப்புரவு அலுவலர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வானது, மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் வீடுகளிலேயே இயல்பான முறையில் மருத்துவ சிகிச்சையின்றி இறந்து விடும் நபர்களை சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டிலுள்ள மயான பூமிகளில் மருத்துவரின் இறப்பு சான்று இன்றி புதைப்பது மற்றும் எரிப்பது ஆகிய செயல்களை செய்வது மிகவும் கடினமாக உள்ளது என்றும், இதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, வீட்டிலேயே இயல்பான முறையில் நோய்களின்றி மற்றும் மருத்துவரின் மருத்துவ கவனிப்பு இன்றி இறந்து விடும் நபர்களின் உடலை மருத்துவரின் சான்று இல்லாமல் தகனம் செய்ய தக்க அறிவுரைகள் வழங்க கோருவது தொடர்பானதாகும். இது தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி பொதுத் சுகாதாரத் துறையில் 22.04.20255 நாளிட்ட சுற்றறிக்கை எண்.HO-GCC/1177/2024-CHOல் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மயான பூமிகளில் மருத்துவ கவனிப்பு அல்லது மருத்துவ கவனிப்பு இல்லாது இறந்த நபரின் உடலை எரிப்பதற்கு / புதைப்பதற்கு பிறப்பு மற்றும் இறப்பு பதிவுச் சட்டம் 1969–ல் பிரிவு 10 மற்றும் உட்பிரிவு (3)–ன்படியும் மற்றும் தமிழ்நாடு பிறப்பு மற்றும் இறப்பு பதிவு விதிகள் 2000ன் விதியின்படியும் தேவையான மருத்துவரின் மருத்துவ சான்றினை (படிவம் 4 / படிவம் (4A) காவல் துறை அறிக்கையினை பெற்ற பின்னரே இறந்த நபரின் உடலை எரிக்கும் / புதைக்கும் பணி மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பிறப்பு இறப்பு பதிவு சட்டம் 1969ல் பிரிவு 10 உட்பரிவு (3)–ல் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"(1) xxx

(2) xxx

(3) மருத்துவ நிறுவனம் அல்லாத வேறு எந்த இடத்திலும் ஒரு நபர் சமீப காலத்தில் உடல் நலமற்று இருந்து, அந்த நபரை ஒரு மருத்துவர் கவனித்து வந்த நிலையில், இறப்பு ஏற்படுகின்ற நிகழ்வில், அந்த மருத்துவர், அந்த நபரின் இறப்பிற்கு பிறகு கட்டணமில்லாமல், உடல் நலமின்மை வரலாறு உட்பட இறப்பிற்கான காரணம் ஏதேனும் இருப்பின் அது அடங்கிய ஒரு சான்றிதழினை வகுத்தமைக்கப்பட்ட அத்தகைய படிவத்தில் இந்த சட்டத்தின் கீழ் இறப்பு தொடர்பான தகவலை வழங்க வேண்டிய நபருக்கு அளிக்க வேண்டும் மற்றும் அந்த நபர் சான்றிதழினை பெறுகையில், இந்த சட்டத்தின் கீழ் அவசியமாயிருக்கிற இறப்பின் தகவலை வழங்குகின்ற நேரத்தில் பதிவாளருக்கு சமர்பிக்க வேண்டும்."

மேற்கண்ட பிரிவு மருத்துவ நிறுவனம் அல்லாமல் மற்றொரு மருத்துவர் கவனிப்பில் இருந்து இறந்த நபருக்கு சான்றிதழ் வழங்குவது பற்றி குறிப்பிடுவதாகும். சென்னை மாநகராட்சியில் வீட்டிலேயே இயற்கையாக இறக்கும் நபர்களின் தகனம்/இறப்பிற்கான சான்றிதழ் வழங்குவது பற்றி குறிப்பிடுவதல்ல.

எனவே பெருநகர சென்னை மாநகராட்சி சுற்றறிக்கை எண்.HO-GCC/1177/2024-CHO மேற்கண்ட பிரிவிற்கு முரண்பாடாக உள்ளதாக இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

எனவே, இப்பொருள் குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர், அரசு சட்டத்துறை செயலருடன் கலந்தலோசித்து தமிழ்நாடு பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவு சட்டம் 1969–ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி சுற்றறிக்கை அமைந்திருப்பதை உறுதி செய்திடுமாறு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 6–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.B. ரமேஷ்,
வழக்குரைஞர்,
222, புதிய கூடுதல் சட்ட அறை,
உயர்நீதிமன்ற வளாகம்,
சென்னை–600 104.

2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

3) அரசு செயலர்,
சட்டத் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.

4) மண்டல அலுவலர், மண்டலம் 4,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண் 266, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
பழைய வண்ணாரப்பேட்டை,
சென்னை–600 021.

5) கண்காணிப்பாளர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர் . 7/11/25

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032